தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 31, திருவள்ளுவர் ஆண்டு-2052

2021 ஆகஸ்ட் 16, திங்கட்கிழமை

சென்னை-600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"காலங் கருதி இருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்."

கலக்கத்துக்கு இடம் தராமல் உரிய காலத்தை எதிர்பார்த்துப் பொறுமையாக இருப்பவர்கள் இந்த உலகத்தையேகூட வென்று காட்டுவார்கள்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. ஆ. தங்கராசு, திரு. க.ந. இராமச்சந்திரன், திரு. கே. பண்ணை சேதுராம், புலவர் பூ.ம. செங்குட்டுவன், திரு. கி. அய்யாறு வாண்டையார், திரு. ம. விஜயசாரதி, திரு. நன்னிலம் அ. கலையரசன், திரு. இ. மதுசூதனன், திரு. திண்டிவனம் கே. ராமமூர்த்தி ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆ. தங்கராசு அவர்கள் 23-5-2021 அன்றும், திரு. க.ந. இராமச்சந்திரன் அவர்கள் 27-5-2021 அன்றும், திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் 19-6-2021 அன்றும், புலவர் பூ.ம. செங்குட்டுவன் அவர்கள்*

2-7-2021 அன்றும், திரு. கி. அய்யாறு வாண்டையார் அவர்கள் 4-7-2021 அன்றும், திரு. ம. விஜயசாரதி அவர்கள் 7-7-2021 அன்றும், திரு. நன்னிலம் அ. கலையரசன் அவர்கள் 14-7-2021 அன்றும், திரு. இ. மதுசூதனன் அவர்கள் 5-8-2021 அன்றும் மற்றும் திரு. திண்டிவனம் கே. ராமமூர்த்தி அவர்கள் 8-8-2021 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. தங்கராசு அவர்கள் 1980-1984 மற்றும் 1985-1988 ஆம் ஆண்டுகளில் குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. க.ந. இராமச்சந்திரன் அவர்கள் 1967-1970 ஆம் ஆண்டுகளில் ஆண்டிமடம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் 1977-1980 ஆம் ஆண்டுகளில் பெரியகுளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

புலவர் பூ.ம. செங்குட்டுவன் அவர்கள் 1996-2001 ஆம் ஆண்டுகளில் மருங்காபுரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கி. அய்யாறு வாண்டையார் அவர்கள் 1984 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் தொகுதியிலிருந்தும், 2001-2006 ஆம் ஆண்டுகளில் திருவையாறு தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க முறையில் பணியாற்றினார்கள். மேலும், 2001 ஆம் ஆண்டில் அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

திரு. ம. விஜயசாரதி அவர்கள் 1980-1984 ஆம் ஆண்டுகளில் அரக்கோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சராகவும் செவ்வனே பணியாற்றினார்கள்.

2021 ஆகஸ்ட் 16] [பேரவைத் தலைவர்]

திரு. நன்னிலம் அ. கலையரசன் அவர்கள் 1980-1984 ஆம் ஆண்டுகளில் நன்னிலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. இ. மதுசூதனன் அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சராகவும் திறம்படப் பணியாற்றினார்கள். மேலும், 1984-1986 ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. திண்டிவனம் கே. ராமமூர்த்தி அவர்கள் 1967-1971 ஆம் ஆண்டுகளில் திண்டிவனம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், 1978-1984 ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1981-1984 ஆம் ஆண்டுகளில் மேலவை எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றினார்கள். மேலும், 1984-1990 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும், 1991-1996 ஆம் ஆண்டுகளில் திண்டிவனம் மக்களவை தொகுதி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்கு அவைகளிலும் பணியாற்றியுள்ளார்கள்.

முற்பகல் 10-05

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS